[திரு. மு. கண்ணப்பன்] [1989 மே 12

முறைகேடுகளைத் தீர்ப்பதற்கு நிச்சயமாக இன்றைக்கு பொறுப்பு ஏற்றுக்கொண்டிருக்கின்ற அரசு அதை சவாலாகவே ஏற்றுக்கொண்டு எதிர்காலத்தில் இத்தகைய முறைகேடுகளைக் களைய நடவடிக்கைகளை அரசு எடுக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) மாசுக் கட்டுப்பாடு வாரிய அலுவலர்களுடைய ஊதியம் சரிவர நிர்ணயிக்கப் பெறாததால் ஏற்பட்டுள்ள பாதிப்பு.

திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரிய விஞ்ஞானிகள் மற்றும் சார்பு அலுவலர்களுடைய அடிப்படைச் சம்பளம், நான்காவது ஒரு நபர் சம்பளக் குழு பரிந்துரையின்படி சரிவர நிர்ணயிக்கப்படாததால் அவ்வாரிய அலுவலர்கள் கடந்த 4 வருடங்களாகப் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க் கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

தமிழ்நாடு அரசு நான்காவது ஊதியக்குழுவின் பரிந்துரையின்படி தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியத்தில் பணிபுரிகின்ற அறிவியல் அலுவலர்கள் மற்றும் சார்பு அலுவலர்களான தலைமை அறிவியல் அலுவலர், துணைத் தலைமை அறிவியல் அலுவலர், இளநிலை அறிவியல் அலுவலர், மின் மேற்பார்வையாளர், களப்பணியாளர் மற்றும் ஆய்வக உதவியாளர் ஆகியோருக்கு 1-10-1984 முதல் ஊதிய விகிதம் நிர்ணயிக்கப் பட்டது.

தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரிய அறிவியல் அலுவலர்கள் மற்றும் சார்பு அலுவலர்கள் தங்களுடைய ஊதிய விகிதத்தை கிண்டி 'கிங்' இன்ஸ்ட்டிடியூட்டில் பணிபுரியும் அறிவியல் அலுவலர்கள் மற்றும் சார்பு அலுவலர்களின் ஊதிய விகிதத்திற்கு இணையாக மாற்றியமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை 1-10-86 அன்று வாரியத்தின் முன் வைத்தார்கள். வாரியமும் அவர்களின் கோரிக்கையை ஏற்று ஒப்புதல் அளித்தது. இதற்கிடையில் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரிய ஆய்வக அலுவலர்கள் மற்றும் சார்பு அலுவலர்களுக்கு வழங்கப்படும் ஊதிய விகிதம் ஏற்கெனவே நான்காவது ஊதியக்குழுவின் பரிந்துரையின்படிதான் நிர்ணயிக்கப்பட வேண்டும் என்று அரசு வாரியத்திற்கு அறிவுரை

1989 மே 12]

[டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி]

வழங்கியது. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியமும் அரசின் அறிவுரையை ஏற்று மேற்படி அலுவலர்களின் ஊதிய விகிதங்களை நான்காவது ஊதியக்குழுவின் பரிந்துரையின்படி கீழ்க்கண்டவாறு மாற்றியமைத்து வழங்க உத்திரவு பிறப்பித்து விட்டது.

1. தலைமை அறிவியல் அலுவலர் : ரூ 1,340–75–1,715–90–2,435.
2. துணைத் தலைமை அறிவியல் அலுவலர். : ரூ 1,160–50–1,460–70–1,950.
3. இளநிலை அறிவியல் அலுவலர் : ரூ 905–45–1,445–50–1,545.
4. மின் மேற்பார்வையாளர் : ரூ 6.0–20–730–25–955–30–1,075.
5. களப்பணியாளர் : ரூ 505–10–555–15–615–20–795–25–845
6. ஆய்வக உதவியாளர் : ரூ 450–10–570–15–720.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கையை, வாரியம் கிங் இன்ஸ்ட்டிடியூட்–உடன் சரிவர தகுதி அடிப்படையின் கீழ் ஒப்புதல் செய்யாமல், ஆய்வக விஞ்ஞானிகள் தகுதி, பி.எஸ்.ஸி., நேர்முகத் தேர்வு, சம்பள விகிதம் ரூ. 95-ஐ வாரிய இளம் விஞ்ஞானி தகுதி, எம். எஸ்சி. நேர்முகத் தேர்வுடன் ஒப்பிட்டு அதே சம்பள விகிதமான ரூ. 95-ஐ வாரிய ஆணை எண் 134, தேதி 10–9–86 மற்றும் எண் 143, தேதி 1'–10–86-ன் கீழ் நிர்ணயித்துள்ளனர். அவ்வாறே சார்பு அலுவலர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்தத் தவறை வாரியம் சரிசெய்ய அரசு ஆணையிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நான்காவது ஊதியக்குழுவின் பரிந்துரையின்படி கீழ்க்கண்டவாறு இந்த ஊதிய விகிதங்கள் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. தலைமை அறிவியல் அலுவலர், ரூ. 1,340 அடிப்படை ஊதியம், துணைத் தலைமை அறிவியல் அலுவலர், ரூ. 1,160 அடிப்படை ஊதியம், இளநிலை அறிவியல் அலுவலர், ரூ. 905 அடிப்படை ஊதியம், மின் மேற்பார்வையாளர், ரூ. 610 அடிப்படை ஊதியம், களப்பணியாளர் ரூ. 505 அடிப்படை ஊதியம், ஆய்வக உதவியாளர், ரூ. 450 அடிப்படை ஊதியம் என்று நிர்ணயிக்கப்பட்டு இருக்கின்றது. அந்த அடிப்படையிலேதான் இவைகள் வழங்கப்படுகின்றன.

இதில் ஏதேனும் சிக்கல் இருப்பதாக அவர்கள் எண்ணுவார்கள் என்று சொன்னால், அது குறித்து முறையான விண்ணப்பம் கொடுத்தால், அதைப்பற்றிப் பேசி அவைகளை முடிவு செய்து கொள்ளலாம் என்பதை அறிவித்துக்கொள்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிங் இன்ஸ்ட்டிடியூட் ஆய்வக அலுவலர்களின் தகுதிப்படி மறுபடியும் நான்காவது சம்பளக் குழு பரிந்துரைத்த அடிப்படை சம்பளம், வாரியத்தின் ஆய்வக மற்றும் சார்பு அலுவலர்களுக்கு 10–6–85 முதல் சரியாக வழங்க அரசுக்கு வாரியம் பரிந்துரைக்குமா? அவ்வாறு சரி செய்த ஒப்புதல் 5 ஆவது சம்பளக் குழு முடிவுடன் இணைக்கப்படுமா என்பதோடு இந்தத் தவறு செய்த உயர் அதிகாரிகள் மீது அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைத்தவறு என்று குறிப்பிடமுடியாது. 1–10–86-ல் அவர்களுடைய கோரிக்கையை வைத்திருக்கின்றார்கள். அந்தக் கோரிக்கையின் அடிப்படையிலே சில முடிவுகள் எடுக்கப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. மேலும் பிரச்சினை வரும் என்று சொன்னால், அதுகுறித்து பேச்சுவார்த்தைகளின் மூலமாக தீர்த்துக்கொள்ள முடியும் என்பதை மட்டும் அறிவித்துக் கொள்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

6. அறிக்கை அளித்தல்

பொது நிறுவனங்கள் குழு

திரு. சா. சிவசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாக குழுவின் 7-ஆவது அறிக்கை முதல் 14-ஆவது அறிக்கை வரை பேரவைக்கு அளிக்கிறேன்.

7. அரசினர் தனித் தீர்மானங்கள்

(அ) மண்டல் குழு அறிக்கையின் பரிந்துரைகளை நிறைவேற்ற வேண்டுமென மத்திய அரசைக் கோருதல்:

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை இந்த மாமன்றத்தில் நான் மொழிகிறேன்: